# அகதி - 3



போடுங்கள்
உணவுப் பாத்திரம்தான் ...,
சிலவேளை ...
நாளைய எங்கள்
கைகள் பார்த்து
நீங்களும் பார்க்கலாம்
இந்தப் பார்வை !

எமது தாயகமும் வடக்கே 5/-

# நேர்வழி

விசுவாசிகளே! (நீங்கள் உங்கள் முயற்சியில் சித்தியடையும் பொருட்டு) பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையோர்களுடன் இருக்கின்றான்.

அன்றி, அல்லாஹ்வுடைய பாதையில் (யுத்தம் புரிந்து எதிரிகளால்) கொல்லப்பட்டவர்களை, இறந்தவர்களெனக் கூறாதீர்கள். அவ்வாறன்று; (அவர்கள்) உயிரோடிருக்கிறார்கள். ஆனால் (இதனை) நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீகள்.

(விசுவாசிகளே!) ஒரளவு பயத்தாலும், பசியாலும் பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் நஷ்டத்தாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். என்றாலும் (நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருப்போருக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!

(சோதனைக்குள்ளாகும்) அவர்கள், தங்களுக்கு எத்தகைய கஷ்டம் ஏற்பட்ட போதிலும், நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம் எனக் கூறுவார்கள்.

இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் ஆசிர்வாதங்களும் கிருபையும் ஏற்படுகின்றன. மேலும், இவர்கள் தாம் நேரான வழியையும் அடைந்தவர்கள்.

அல்குர் ஆன் - அல்பகறா - வசனம் 153 - 156

# அகதி

அகதி

இதழ் 3: 1994

தொடர்புகள்

வடக்கு முஸ்லிம்களின்
உரிமைக்கான அமைப்பு
15 A,ரோஹினி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6.

தொலைபேசி :586660
பெக்ஸ் :586660

"AHATHI"
Published by
NORTHERN MUSLIMS'
RIGHTS ORGANIZATION
15 A Rohini Road,
Colombo - 6.
Sri - Lanka

இச்சஞ்சிகையில் வெளியாகும்
ஆக்கங்களுக்கு அவற்றை
எழுதியோரே பொறுப்புடையவர்கள்

'அகதி'யின் அவலம் தொடர்கதை தானா?

வடக்கிலிருந்து விரட்டப்பட்ட
முஸ்லிம் சமூகம்
இன்று
அனாதரவாக விடப்பட்ட நிலையில்
தனது எதிர்காலத்தில்
எவ்வித நம்பிக்கையும் அற்றவர்களாக
அகதி முகாமிற்குள்
உண்பதற்கு போதிய உணவுமின்றி
உடுத்துவதற்கு நல்ல உடையுமின்றி
உறங்குவதற்கு இடமுமின்றி
கல்வி பெற - தொடர வாய்ப்புமின்றி
பல்வேறு வகையான சுகாதாரச்
சீர்கேடுகளுடன்
முடங்கிக் கிடக்கின்றது.
இந்த அவலநிலை தொடர்வதற்கு
பிரதான காரணம்
தன்னிடமிருந்து பலாத்காரமாய்
பறிக்கப்பட்ட
உரிமைகளை வென்றெடுப்பதற்கு
தன்னைச் சூழ போடப்பட்டுள்ள
முள் வேலிகளைத்
தகர்ப்பதற்கு,
தனது சொந்த மண்ணில்
மீண்டும் வாழ்வதற்காக வேண்டி
முகாம் வாழ்க்கையிலிருந்து
விடுதலை பெறுவதற்கு.
தனக்குரிய
பாதை எது என்று

சிந்திக்க
வடக்கு முஸ்லிம் சமூகம்
தவறிவிட்டது.
தான் இழந்து நிற்கும்
உரிமைகளை
யாரோ பெற்றுத் தருவார்கள்
அல்லது
என்றோ ஒருநாள் அது வானத்திலிருந்து
தனது மடியில் விழும் என்று
எண்ணிக் கொண்டிருக்கிறது.
இந்த
தவறான சிந்தனைதான்
கடந்த வருடங்களில்
சமூகத்தை செயலிழந்து
நிற்கச் செய்தது.
நமக்காக
நமது விடுதலைக்காக
சகல ஏதேச்சதிகார அடக்குமுறைகளிலிருந்து
விடுபடுவதற்காக
நாமே முயற்சிக்காத வரையில்
அதற்கான அர்ப்பணங்களை தர
முன்வராத வரையில்
எமது அவலங்களும் துயரங்களும்
தொடர் கதைதான்.
எமது உரிமைகளை வென்றெடுக்க
நாம் ஓர் சக்தியாக ஆகவேண்டும்.
எமக்குள் எமது உரிமைகளை
வென்றெடுக்கும் விடயத்தில்
கருத்தொற்றுமை வேண்டும்.
வாருங்கள்
ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!

*''உரிமைகளின் உண்மையான மூலம் கடமையே''*

*மகாத்மா காந்தி*

பறிபோன உரிமைகளைப் பிச்சையாகப் பெறமுடியாது. தீர்மானங்கள் மூலமோ மன்றாடுவதன் மூலமோ நியாயம் பிறக்காது. ஆடுகளைத்தான் கோயில்களின் முன் வெட்டுகிறார்களே ஒழிய சிங்கங்களை அல்ல. சிங்கங்கள் போல வீறு கொண்டு எழுங்கள்.

*டாக்டர் அம்பேத்கார்.*

அழிந்து போகக் கூடிய வாழ்வில் நிலையான இன்பத்தைப் பெற வேண்டுமானால், அல்லாஹ்வின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு செயல்பட வேண்டும். செயல்களுக்கு மூலக்கரு நம்பிக்கையே. இறை நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்வின் ஒவ்வொரு துறையையும் அமைத்துக் கொண்டால் அதுவே பேரின்பம் ஈருலக வெற்றிக்குரிய வழி.

மௌலான முகம்மத் இல்யாஸ் (ரஹ்)

# பாதிக்குப்பட்டவர்களின் பாதுகாப்புக்கு உமர்-றலி. காட்டும் வழி

ஹி 14ம் ஆண்டு முஸ்லிம்களுக்கும் பாரஸீகர்களுக்கும் இடையில் யுத்தம் நடந்தது. காதிஸிய்யா என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் ருஸ்தும் எதிரிகளின் தலைவனாக இருந்தார். அவரின் படையில் ஒருலட்சத்து இருபதாயிரம் வீரர்கள் இருந்தனர். அவர்களிடம் தேவைக்கும் அதிமான ஆயுதங்களும் யுத்தத்துக்கு உதவும் ஏனைய பொருட்களும் இருந்தன.

முஸ்லிம்களின் இராணுவத்தில் பத்தாயிரம் வீரர்கள் மட்டுமே இருந்தனர். எதிரிகளிட மிருந்த ஆயுதங்களுடன் ஒப்பு நோக்கும்போது இவர்களிடம் ஆயுதங்களே இல்லை என்று சொல்ல முடிந்த அளவு குறைவான ஆயுதங்களே இருந்தன.

யுத்த முஸ்தீபுகளில் ஈடுபட்டிருந்த தளபதி ஸஅத் பின் அபீவக்காஸ் (ரழி) அவர்கள் தங்களுக்கு மேலும் இராணுவத்தி னரையும் ஆயுதங்களையும் தந்துதவுமாறு கலீபாவுக்கு கடிதம் எழுதினார். அதற்கு கலீபா அவர்கள் அளித்த பதில் வருமாறு.

'நீங்களும் உங்களுடனிருக்கும் இராணு வத்தினரும் எல்லா நிலைகளிலும் அல்லாஹ் வுக்குப் பயந்து நடந்து கொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் பணிக்கிறேன். ஏனெனில் இறையச்சம் என்பது எதிரிகளை எதிர்க்க உதவும் பலமான ஆயுதமும் யுத்தங்களின் போது பயன்படும் சிறந்த தந்திரமுமாகும். நீங்களும் உங்களுடன் இருப்பவர்களும் உங்களின் எதிரிகளைப் பற்றிக் கவலைப் படுவதைவிட உங்கள் மத்தியில் பாவச்செயல்கள் இடம் பெறக் கூடாது என்பதில் அதிக கவனமும் அக்கறை யும் கொள்ள வேண்டும். ஏனெனில் ஓர் இராணுவத்தினர் பாவச் செயல்களைச் செய்வது அவர்களுக்கு அவர்களின் எதிரிக ளைவிட ஆபத்தானதாகும். முஸ்லிம்களின் எதிரிகள் அல்லாஹ் விரும்பாதவற்றைச் செய்பவர்களாகவிருப்பதன் காரணமாகவே அந்த எதிரிகள் மீது முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைக்கிறது.

முஸ்லிம்களாகிய எமது தொகை அவர்களின் தொகைக்கு நிகரானதல்ல. எம்மிடம் அவர்களிட மிருப்பது போல யுத்த தளபாடங்களுமில்லை. ஆயினும் அவர்கள் பாவம் செய்பவர்களாக விருப்பதாலேயே எங்களுக்கு அல்லாஹ்வின் உதவிகிடைக்கிறது. ஆனால் நாமும் அவர்க ளைப்போல பாவச் செயல்களைச் செய்வோமாயின் அவர்களிடமுள்ள ஆயுதங்கள் காரணமாக எம்மைவிட பலசாலிகளாக அவர்கள் விளங்கு வார்கள். எனவே எமது நன்னடைத்தை காரணமாக எமக்கு அல்லாஹ்வின் உதவி கிடைக்காவிட்டால் ஆயுத பலத்தால் நாம் அவர்களை வெற்றி கொள்ளவே முடியாது.

நீங்கள் எங்கிருந்தாலும் சதா உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் வின் அமரர்கள் உங்களோடு இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் அனைத்தையும் அவர்கள்

அறிகிறார்கள், ஆகவே அவர்கள் உங்களை அவதானித்துக் கொண்டிருப்பதை அறிந்து நீங்கள் வெட்கப்படுங்கள். நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் அல்லாஹ் விரும்பாத பாவச் செயல்களைச் செய்யாதீர்கள். எங்கள் எதிரிகள் எங்களைவிடக் கெட்டவர்கள், ஆகவே அவர்கள் எங்களை வெல்லப் போவதில்லை என்று நீங்கள் நம்பி விடாதீர்கள். இஸ்ரவேலர்களின் சந்ததியார் அல்லாஹ்வுக்கு மாற்றம் செய்து பாவச் செயல்களில் ஈடுபட்டபோது காபிர்களான மஜூஸிகளை அல்லாஹ் அவர்கள் மீது சாட்டி விட்டான். எனவே அந்த மஜூஸிகள் இஸ்ரவேலர்களின் வீடுவாசல்களையெல்லாம் அழித் தொழித்தார்கள். இதேபோல எத்தனையோ இனத்தவர் மீது அவர்களைவிடக் கொடிய வர்கள் ஏவிவிடப்பட்டனர். இது என்றும் நடக்கக் கூடிய ஓர் ஏற்பாடாகும். ஆகவே உங்கள் எதிரிகள் மீது உங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று நீங்கள் பிரார்த்திப்பதுபோல நீங்கள் பாவம் செய்யாது வாழ்ந்து அல்லாஹ்வின் பாதுகாப்பைப் பெற உதவுமாறு அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.''

- ஸ்ஹாராய் -

# காலை எழுந்தவுடன் விளையாட்டு

மகாகவி பாரதியார் அன்று....

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப்டுத்திக் கொள்ளு பாப்பா...

என்று பாப்பா பாட்டு பாடினார்.

பராதி இன்றிருந்தால்... மன்னார், முல்லைத் தீவு யாழ்ப்பாண மக்கள் அதிகமாக முகாமிட்டு வாழும் புத்தள பகுதிக்கு வந்து... முன்பு பாடிய பாடலை இப்படி மாற்றியிருப்பார்.

காலை எழுந்தவுடன் விளையாட்டு - பின்பு
கனிவு கொடுக்கும் சினிமாப்பாட்டு
மாலை பொழுதில் கொஞ்சம் படிப்பு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.... என்று

கலை நெஞ்சன் ஏ. ஹாஜா அலாவுதீன்,
கல்/தாருஸ்ஸலாம் மு.ம.வி. (ஆசிரியர்)
கொத்தாந்தீவு.

ஆம்.. புத்தளம், கற்பிட்டி பகுதிகளில் அன்ஸாரி முஸ்லீம்களின் உதவியுடன் வாழும் அகதி குடும்பத்தர்களின் பிள்ளைகளுக்கு பெரும்பாலான இடங்களில் மாலைப் பாடசாலை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலையின் இடவசதி தளபாடத் தட்டுப்பாடு என்ற காரணங்களினால்தான் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என நியாயப்படுத்தப்பட்டாலும் அகதி மாணவர்களின் கல்வி நிலை, உடல் ஆரோக்கியம் என்பவற்றினை கருத்தில் கொள்ளும் போது பாரிய பாதிப்பினை விளைவிக்கக் கூடும் என சிந்திப்போர்கள் இல்லாமலில்லை. எனினும் மனதுக்குள் முணுமுணுத்துக் கொள்வதுதான் விடய வினாவுக்கு விடையாகக் கிடைக்கின்றது.

பைந்தமிழ் கவி பாரதி மட்டுமல்ல - பல கல்வியல் அறிஞர்கள் முஸ்லீம் மேதைகள் காலை நேரத்தைத் தான் கல்விக்கு பிரேரித்திருக்கிறார்கள். மாலை நேரம் மாணாக்கரின் விளையாட்டுக்குரிய நேரமாகும். இந்த இடத்தில், மாலை நேரத்தில் ரியூசன் வகுப்புக்குச் சென்று விளையாடவா?.... செய்கிறார்கள் என விகட வினாவையும் எழுப்பிக் கொள்ளலாம்.

→17

# எண்ணக் குமுறல்கள்

வடமாகாண முஸ்லிம்களின் அவலங்களை உலகுக்கு எடுத்துக் காட்டி அம்மக்களின் விடுதலைக்காகவும் வளர்ச்சிக்காகவும் குரல் கொடுக்கவல்ல ஓர் அமைப்பு உருவாகியிருப்பதனையிட்டு நானும் 'அகதி' என்ற வகையில் மிக்க மகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

எஸ்.எம்.எம். நபீஸ்,
ஜாமிஆ நழிமிய்யா,
பேருவளை.

தங்கள் 'அகதி' வெளியீட்டிதழ் வாசித்தேன். வரவேற்கத்தக்கதும், வாழ்த்துக் கூற வேண்டியதுமான ஒரு முயற்ச்சி. இருப்பினும் காலம் கடந்து வெளிவருவதுதான் வேதனைக்குரியதாக இருக்கின்றது.

எம். றைசுத்தீன்,
பிரதான வீதி,
கற்பிட்டி.

தாங்கள் வெளியிட்ட 'அகதி' என்ற சஞ்சிகையை பார்வையிட்டேன். மிகச் சிறப்பாக உங்கள் கன்னிமுயற்ச்சி அமையப்பெற்றிருந்தது: பாராட்டுக்கள்: உங்கள் பாதையில் வெற்றியடைய அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

மபாயிஸ்.

அகதிகளின் பெயரைச் சொல்லி பெருமளவு இயக்கங்கள் பிரம்மாண்டமான அளவில் பணங்களைச் சேர்த்துக் கொண்டன. சில தமது அரசியல் லாபத்துக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் அகதிகளின் பிரச்சினைகளை அவனிக்கு கொண்டு வருவதுடன் அவர்களின் உண்மையான உரிமைக்குரலாக உலவட்டும். அகதி முதலாவது இதழ் கிடைத்தது. வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

எம்.எஸ். அப்துல் ரஹீம்,
மகரகம.

பல்வேறு சிக்கலான நிலைமைகள் சூழ்ந்துள்ள இக்காலப்பகுதியில் சமூக எழுச்சியை மையமாகக் கொண்டும் பலத்த வரவேற்புடனும் வெளிவரும் 'அகதி' கண்டேன். ஆஹா... கதியற்ற எங்களுக்கு களம் சமைக்கும் கருவி. கிணற்றுத் தவளைகளாக கனவு கண்டு கொண்டிருக்கும் அன்சாரீன்களுக்கும் நிஜத்தை நிரூபிக்கும் நிழல்.

எ.ஆர்.எம். ராஜி,
மோதர மொறடுவ.

அண்மையில் தங்கள் நிர்வாகத் திறன் காரணமாக வெளிவந்த 'அகதி' என்ற சஞ்சிகையை வாசிக்கும் சந்தர்ப்பத்தை எல்லாம் வல்ல இறைவன் எனக்களித்தான் பத்திரிகையின் சகல அம்சங்களும் சிறப்பாக அமைந்துள்ளது. 'கௌன்டர் பொயின்ட்' பேட்டிக்கு நாம் நன்றி செலுத்துவோம். மேலும் சகோதரி ஜி. மொனிக்காவின் 'அந்த வேடம்' கவிதை கண்ணில் கண்ணீரை வரவழைத்துச் சென்றது.

எஸ். றாசிக் பரீட்,
முஸ்லிம் அகதி முகாம்,
நெல்லியாகம.

# யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறு

(சென்ற இதழ் தொடர்ச்சி..)

இதே காலத்தில் மற்றுமொரு மிகவும் பெரிய குடியிருப்பு நல்லூரில் அமைந்திருந்தது. இங்கு ஒரு பெரிய ஜும்ஆப் பள்ளி அமைந்திருந்தது. இதிலும் ஆயிரம் பேர்வரை தொழக்கூடியதாக இருந்தது. பிற்காலத்தில் உசனில் வாழ்ந்தவர்களும் இங்கு வந்து குடியேறினர். இங்கு வாழந்தவர்கள் வணிகத்துடன் வைத்தியம், போர்ப்படை, அரசியல் ஆலோசனை ஆகியவற்றிலும் கவனம் செலுத்தினர். இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இருக்குமிடத்தில் ஒரு பள்ளிவாசலும் அந்தப் பள்ளிவாசலையண்டி ஒரு மையவாடியும் அதனைச் சூழ முஸ்லிம்களும் குடியிருந்தனர்.

இப்பகுதியில் குடியேறுமுன் சாவகச்சேரிக்கு அருகில் உள்ள சோனகன் புலவிலும் சிறிது காலம் வாழ்ந்துள்ளனர். இன்றும் அப்பகுதி 'சோனகன் புலவு' என்று வழங்கி வருகிறது.

இறுதியாக இதே காலத்திலும் அதன் பின்பும் முஸ்லிம்கள் ஒரு பகுதியினர் கடைசியாக பெரும்பான்மையாக வாழ்ந்த நாவாந்துறைக்குக் கிழக்கிலும் வாழ்ந்து வந்தார்கள்.

இந்தப் பிரதான ஐந்து குடியிருப்க்களை விடவும் பொதுவாக குடாநாடெங்கணும் பரவியிருந்ததற்குப் போதிய ஆதாரமுண்டு. கொடிகாமம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய குடாநாட்டின் பகுதிகளிலும் நயினாதீவு, மண்குப்பான் ஆகிய தீவுகளிலும் இன்றும் பள்ளிவாயல்கள் உண்டு.

போர்த்துக்கேயர் ஆதிக்கம் பெறுவதற்கு முன்னுள்ள காலப்பகுதிகளில் யாழ்ப்பாண அரசனின் அந்தரங்க ஆலோசகர்களாகவும், வைத்தியர்களாகவும் முஸ்லிம்கள் பலர் கடமையாற்றியுள்ளனர்.

இதனை விட அபிசினியப் பகுதியிலிருந்தும் முக்கியமாக நீக்கிரோவ முஸ்லிம்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடியேறியுள்ளனர். இவர்கள் இங்கு குடியேறிப் பெரிதும் கடற்றொழில்களிலேயே ஈடுபட்டனர். இன்றும் இவர்களின் வழித்தோன்றல்கள் யாழ்ப்பாணத்திலும் நாச்சுக் குடாவிலும் இருப்பதைக் காணலாம்.

இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வரும்வரை முஸ்லிம்கள் மிகுந்த கௌரவத்துடன் வாழ்ந்தனர். முஸ்லிம்கள் மிகுந்த கௌரவத்துடன் வாழ்ந்தனர். கி.பி. 12 நூற்றாண்டு முதல் அராபிய வர்த்தகர்களின் வணிகக் கனங்கள் இந்து சமுத்திரத்தைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தன. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசின் எழுச்சிக்கு மேற்காசிய வணிகக் கனங்களும் அவைகளால் கிடைத்த பொற்குவைகளுமே காரணமாயிருந்தன.

வடக்குத் தமிழரசு தெற்கின் சிங்கள அரசை எதிர்க்கப் போதிய பலம் தந்ததும் இந்த வணிகக் கணங்களேயாகும்.

முஸ்லிம்கள் வாழ்வில் தமிழர் தம் பண்பாட்டு அம்சங்கள் பலவும் புகுவதற்கு இங்கு நிலவிய ஒற்றுமையே காலாக அமைந்தது. முஸ்லிம் வணிகர்கள் பலர் தவணை முறையையும் ஈழத்துக்கு அறிமுகம் செய்து வைத்தனர். வணிகத்துக்காகச் செல்கின்ற தவள மாடுகள் தங்கிச் செல்லவென பல சுமைதாங்கிகளைத் கட்டினர். மடங்களை நிர்மாணித்தனர். கிணறுகளையும் தம் செலவிலே தோண்டினர். இவற்றில் சில வற்றை

இன்றும் காணலாம். யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஆறுகால் மடம் இவற்றுள் ஒன்றாகும். அது முன்பு முஅத்தின் மடம் என்று அழைக்கப்பட்டது. 'முஅத்தின்' என்ற அறபுப் பதத்தை உச்சரிப்பது சிரமமாக இருந்ததனால் தூண்களைக் கணக்கிட்டே 'ஆறுகால் மடம்' என அழைத்தனர். இம்மடத்தோடு சேர்ந்து ஒரு நன்னீர்க் கிணறும் சுமைதாங்கியும் அமைந் துள்ளன. இதன் பழைய தாய் உறுதிகள் இதனைப் புலப்படுத்தும்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருமுன்னரே யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்து வந்துள்ளனர். நாச்சுக்குடா, பள்ளிக்குடா, பூ நகரிக் குடியேற்றங்களும் காலத்தால் முந்தியனவே, பூ நகரியின் பொறுப்புள்ள தலைவராக நெய்னாபிள்ளை மரைக்கார் என்பவர் இருந்ததையும் சான்றுகள் உறுதிப்படுத்தும்.

எனவே, போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது 5 பிரதான குடியிருப்புக்களிலும் ஏனைய 10க்கு அதிகமான இடங்களிலும் முஸ்லிம் பரந்து வாழ்ந்துள்ளார்கள். நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகங்கள் அவர்கள் கைகளிலேயே இருந்தன. தமிழ் மக்களுடன் எவ்வித போட்டி பொறாமையும் கொள்ளாது மன மகிழ்வுடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். படை வீரர்களாக, அரச ஆலோசகர்களாக, வைத்தியர்களாக மட்டுமல்லாது சிறந்த வணிகக் கணங்களின் தலைவர்களுமாக அவர்கள் திகழ்ந்துள்ளார்கள் இக்காரணங்களால் மிக முக்கியமான இடத்தினை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

இக்கட்டுரையின் இரண்டாம் பகுதி' **''போர்த்துக்கீசர் காலத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்கள்''** என்ற தலைப்பில் அடுத்த இதழில் இடம்பெறும்.

★இச் சஞ்சிகையில் இடம் பெறுவதற்காக எமது மக்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை இன்னும் முகாம் செய்திகள், வாழ்க்கை அனுபவங்கள் ஆலோசனைகள் என பல்துறை விடயங்களையும் ஆக்கங்களையும் எதிர்பார்க்கிறோம்.

## புத்தளம் 2ம் கட்டை ஒற்றையடிப்பனையடி அகதி முகாம் தீயில் எரிந்து நாசம்

புத்தளம் மன்னார் வீதியிலுள்ள ஒற்றைப் பனையடி எனும் இடத்திலுள்ள உப்பளம் முகாம் 2 என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் மக்களைப் பெரும்பான்மையாகவும், மன்னார் மக்களையும் உள்ளடக்கிய 186 குடும்பங்களைக் கொண்ட இவ்வகதிமுகாம் 3.4.94 அன்று பி.பகல் 2.40 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தில் முற்றாக எரிந்து நாசமாகியது.

இம் முகாமிலுள்ள பள்ளிவாசலும், சங்கத்தின் அலுவலகத்தையும் அதைச் சுற்றியுள்ள இரண்டு குடிசைகளையும் தவிர ஏனையவைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டது.

இம் முகாமில் பரவிய தீயை அணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் காற்றின் அகோரத்தன்மையால் பலனளிக்கவில்லை. உக்கி இத்துப் போயிருந்த குடிசைகளின் கிடுகுகள் தீ பற்றி 10 நிமிடங்களுக்குள்ளேயே யாவற்றையும் முற்றாக எரித்து அழித்துவிட்டது.

இத் தீவிபத்தின் போது இதனை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இம்முகாமில் வசித்த நாச்சுக்குடாவைச் சேர்ந்த, மூன்று பிள்ளைகளின் தந்தையான நாற்பது வயதுடைய எஸ்.எச். ஜமாலுத்தீன் என்பவர் முற்றாக எரிந்து இறந்து போனார். (அல்லாஹ் அவரது பாவங்களை மன்னித்து நல்லருள் புரிவானாக) இன்னும் மூவர் எரிகாயங்களுக்கு உள்ளாகி அவசர சிகிச்சையும் அளிக்கப்பட்டன. இதுதவிர சிறுசிறு எரிகாயங்களுடன் பலர் காணப்பட்டனர்.

தற்போது 186 குடும்பங்களைச் சேர்ந்த இம் முகாம் மக்கள் புத்தளம் சாகிராக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உடனடி நிவாரண நடவடிக்கைகளை புத்தளம் பிரதேச செயலக உதவி அரசு அதிபர் முயினுத்தீனும் மற்றும் பொது ஸ்தாபனங்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அகதி மக்கள் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் புத்தளம் அரச செயலகப் பிரிவு உயர் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், மற்றும் ஊர் பிரமுகர்கள், மக்கள் அனைவரும் ஸ்தலத்திற்கே வந்து செய்த உதவிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.

*வீரத்தின் வித்தே - நீ*
*ஓரத்தில் நிற்கலாமா?*

என் தோழனே....
ஏனிப்படி அயர்ந்து விட்டாய்?
சஞ்சீவியை வைத்துக் கொண்டு
பச்சிலைக்கு பறக்கலாமா?
மறையை வைத்துக் கொண்டு
வாழ்வில்
நிறைவில்லை என புலம்பலாமா...?

☆

போதும்
உன் புலம்பலைத் தூக்கி யெறிந்துவிடு!
பூமா நபிகளாரின்
புண்ணிய வாழ்வ
எண்ணிப்பார் ஒரு நிமிடம்!
உன் வாழ்வின்
பொருளும் விளங்கும்!

☆

கோட்பாடுகள் கொண்ட
நம் சமுகத்தை
கேட்பாரற்று கிடக்கிறதென
நினைக்கிறாரே சிலர்
அவர்களின்
எண்ணங்கள் சிதறிட
சிந்தை தெளிந்திட
உனது
உழைப்பை உயர்த்திடு!
உண்மையை உணர்த்திடு!

☆

வீரத்தின் வித்தாக வெடித்த நீ
ஓரத்தில் நிற்கலாமா...?
ஒதுங்கும் காலம்
உருண்டோடி விட்டது!
நீ
துணிச்சலுடன் வெளியே வா!
நீ விண்ணுலகு போகுமுன்
இம்மண்ணுலகில் ஆற்ற வேண்டிய
கடமைகள் ஏராளம்....!
எனவே நீ
எழுச்சியோடு விரைந்து வா!

☆☆☆

K.A. முஹம்மது

உயிரே நீ துடிக்காதே .....

புழுதி ஸகராவாய் புறப்பட்ட அக்கினி
காரிகைத் தீயில் கட்டுண்ட கபழீகத்து
கரு ந(ா)கங்கள்....
உயிரை விலக்கி நீதியை கிழித்த
அந்த நிகழ்கால கிளிசல்கள்....

நினைவுத் தூபியாய்
மனிதத்துவத்தை துரத்தி(ய)...
ஏணிப்படிகளாய் .....!
தெருவீதியாய் ....! நாம்
இருந்த நிலை மறந்து
ஓடு.... எங்கே? கர்ஜிப்பு செய்த இந்த
யுகாக்கினியின் ரெத்தவிசிறிகள்....
"மனங்கள் பாலையாய் நிலங்களைப் பிரித்து
பிரபஞ்சத்தின் பிழிவாய் பல்லாயிரம்
மனசுகள்".....
அதிகார சிறுத்தையின் கடைசித் தும்மலாய்
ஒத்திகைப் பேய்கள் மேகங்களை மறைக்க
"எங்கோ தெரியும் குருட்டு வெளிச்சம்
நோக்கி
இந்த விட்டில் பூச்சிகள்...
பாவம்...
உலக உயிருக்கே வெளிச்சமிட்ட நிலாக்கள்
இன்று ஓட்டை குடிலோடு உயிர்வாழும்
நிலை....
வடக்கின் உயிரே துடிக்காதே..."நீ"
திக்குச்சுப் பூதங்கள் விண்ணப்பித்த
வினாக்கள்
உரசிப்பார்க்கப்பட இருக்கிறது
"அந்தமுகாமில்"

☆ ☆ ☆ ☆

விடத்தல்தீவான்
"உவைஸ்கனி"

### எங்கிருந்தாலும் வாழ்க!

காட்டிடை கன்னைக் கட்டிக்,
கருத்தின்றி விட்டாற் போல,
ஆட்டியே எம்மை அன்று
அலைக்கழித் தாக்கர் கூட்டம்
ஓட்டிய போது, நாட்டின்
ஒவ்வொரு மூலை தேடி,
வாட்டிய பசி, நோய் சேர
வழியெல்லாம் விழி நீர் சோரப்,
பாட்டிலும் அடங்காத் துன்பப்
பட்டு நாம் கெட்டு வந்தோம்.
☆

கேட்டிடை நன்மை போலக்,
கேளிராய், நண்பர் தாமாய்,
வீட்டிலும், பணிகள் நாடி
விரைந்திடும் நலங்கள் தோறும்,
நீட்டிய கரங்களோடும்,
நெஞ்சினில் நிறை பண்போடும்,
தேட்டங்கள் அறிந்து நித்தம்,
தீர்ந்திடத் துடித்து நின்று,
காட்டிய பரிவினாலும்,
கனிவுறு மொழியினாலும்
வாட்டிய கவலை நீங்க,
மனமதிற் தெளிவு கண்டோம்.
☆

வட்டமாய் உயர்ந்த தென்னை,
உவக்கும் மா, கமுகு பலா,
நாட்டிய தேக்கு, கோப்பி,
நனிசுவைப் புளியமரக்
கோட்டையாம் "சியம்பளாகஸ்
கொட்டுவை" வாழும் மாந்தர்,
ஏட்டிடை இலக்கியம் போல்,
எங்கிருந்தாலும் வாழ்க!
☆ ☆ ☆

திருமதி ஜெய்னா ஹுஸைன்
மன்னார் 02.

### விதவைக்கோல விரதங்கள்..

இரத்த ஓட்டம்
வெள்ளோட்டம் போன
பாதையெங்கும்
அந்திப் பொழுதிற்கு
ஒரு
புதிய விலாசம்....!

தெருநாய்களின் கூப்பாடு
துப்பாக்கிகளின்
நிழலில்
நிறுத்தப்பட்டவர்களுக்கு
இரவுச் சாப்பாடு....!

'துப்பாக்கி' என்று
மொழிந்தால் கூட
தான் சுடுபட்டதாய்
நினைக்கத் தோன்றுவது
இந்தத் தேசத்தில்தான்.....!

நிஜங்களில் மட்டும்
நிற்க வேண்டிய
'அமைதி' என்பது
இப்பொழுதெல்லாம்
மக்கள் நினைவில் மட்டும்
நிற்கிறது....!

இரத்ததானங்களை
அடிக்கடி
செய்து கொண்டதனாலா
இந்தத் தேசம்
இப்படி
இளைத்துப் போயிருக்கிறது....?!

என்றும்
இறந்து கிடப்பதனாலா
சமாதானக் குறியீடு
விதவைக் கோலத்தில்
விரதம் கொள்கிறது...?!

-ரிஸ்ரான் ஸெய்ன்-

### மன்னித்துக் கொள்

தாயே
அதென்ன
ஒரே நாற்றம்

சகிக்கவில்லை
துர்வாடைக்குள்
துவண்டு கிடக்க
எப்படி தாயே
மனம் வந்தது

ஐயோ
அழுக்கடைகள்....
கருவறைக்குள்
கண்மூடிக் கிடந்த போதெல்லாம்
தூய்மைப்பாய்களில்
துஞ்சினேனே

முன்பு
இசையுடன் -உன்
இதய ஒலி கேட்டேன்
ஒரே இரைச்சல்

எத்தனை விழுமியங்களால்
நீராட்டப்பட்ட
என்னை
கன்னரா பட்டுவிட்டாய்
தாயே

தாயே
நான்
தரணிக்கு வர
நீ ஏன்
விண்ணப்பித்தாய்

தாயே
இந்தஉலகின்
பெயர் என்ன

தாயே
அது......
..........
ஓ... மன்னித்துக்கொள் தாயே
மன்னித்துக்கொள்
இது அகதி முகாம் என்று
அறியாமல்
நா மலைகளில்
வார்த்தைகளை
ஆறாக்கி விட்டேன்.

யாழூர் ரஹீம்ராஜி

'விமர்சனத்தால் காப்பாற்றப்
-படுவதை விட, புகழ்ச்சியினால்
அழிந்து போவதையே
பெரும்பாலானோர் விரும்புகின்றனர்'
-நோர்மன் வின்சன்ட் பீல்-

எட்டுப்பேர் மாண்ட
அந்தக் குண்டு வெடிப்பு
பயங்கரவாத இருப்பை
மீண்டும்
பகிரங்கப்படுத்திச் சொன்னது.

பயணப்பட்டவர்கள்
போகுமிடம் தெரியாமலும்
டிக்கட் இல்லாலும்
பயணப்பட்டார்கள்.
அவர்களுக்கென்ன
அழுது தொலைப்பதற்கு
ஆயிரம்பேர் இங்கிருக்கிறார்களே!

"சுத்திச் சுத்தி
சுப்பர் கொல்லைக்குள்ள"
என்றமாதிரி
இன்னும் சுற்றிக் கொண்டிருக்கிறது
இந்தப்பயங்கரவாதம்

அழிப்புக்கள் துரத்தல்கள்
என்ற பாசிஸத் தொடரில்
மீண்டும் ஓர் அழிப்பு

"அவன்களை
அவர்கள் அழிக்க
சும்மாயிருப்பவர்களை
"அவன்கள்" அழிக்க
வருகின்ற காலத்தில்
அழிக்கப்படாத சரித்திரம்
ஒவ்வொருவருக்குமாய்
ஒவ்வொன்றாய் எழுதப்படும்!

எந்தக் கிழவியின்
பொட்டலத்தினுள்ளோ
எந்தக் கடலைக் காரனின்
கடலை பேசனுக்குள்ளோ..
எவனின் பையினுள்ளோ..
குண்டு இருந்திருந்தாலும்
செத்தது ஒன்பது பேராம்,
காயப்பட்டது இருபதுபேராம்!

இறந்ததில் எவராவது
என்னவராய் இருக்கவும்
கூடும்!
அவருக்காக நான்
எழுதாவிட்டாலும்
எவருக்காவோ
அல்லது எதற்காகவோ
எழுதிக்கொண்டிருக்கிறேன்.

பாட்டுக் கேட்டுக்கொண்டே
கவிதை(யாய்) எழுதிக்

# நாட்டு நடப்புக்கள்

கொண்டிருக்கிற எனக்கு..,
என்னைப் போன்றோருக்கு
எதுவும் .... சூடாய்
சொரணையாய்
இருக்கிறதா.? என்ற கேள்வி
எழுந்தாலும்
எழுதிக்கொண்டேயிருக்கிறேன்
எனக்கு
என்னைப் போன்றோருக்கு
வேண்டியது கவலையா,
கவிதையா...
அல்லது
கவலையான கவிதையா
அதுகூடத் தெரியாது
இன்னும் எழுதிக்கொண்டே
யிருக்கிறேன்!

சாவே மலிவாகிவிட்டபோது
என் கவிதை
விலைபோக வேண்டுமென்ற
எந்த எதிர்பார்ப்புமில்லை
ஆதனாலும் எழுதிக்
கொண்டிருக்கிற இதற்குள்
ஒளித்துவைக்கப்பட்ட
குண்டைப்போல
வெடிக்காவிட்டாலும்,
விபரம் புரியவைக்கும்
ஏதாவது இருக்கும்!

அலங்காரமாய் வந்து
தங்கள் உயிரைக்கூட
சேமிக்கத் தெரியாமல்
எத்தனையோ பேர்
செத்துவிட்ட பிறகு
சொற்களைச் சேமித்து
கற்பனை அழகுபடுத்தி
கவிதை எழுதும்தேவை
இப்போது எனக்கு இல்லை

அந்த
ஒன்பது உடம்புகளும்
சிதறியிருக்கும்...
என் கற்பனையைப்போல்

ஸ்நேகதூதன்

அத்தனையையும்
பொறுக்கி எடுத்துக்
குவித்திருப்பார்கள்.
என் கவலையைப் போல்..!

ஊரே பரபரக்கும்
அவளை முதலில்
பார்த்தபோது இருந்த
என் இதயத்துப்
படபடப்பைப் போல்!

உம்மாவுக்கு
தூக்கம் தொலைந்திருக்கும்,
வாப்பாவுக்கு
இன்னும் ஏதாவது
வேலை வந்திருக்கும்
தம்பிமார் வீட்டோடு
அடைபட்டிருப்பர்
எது அல்லது எவர்
எப்படியிருந்தாலும்
காலம் தன்பாட்டில் போகும்
குண்டு வைத்தவர்கள்
இன்னொரு இடம்
தேடிக் கொண்டிருப்பார்கள்

விதவை, அநாதைப் பட்டியல்
நீளும்
"மனித" உரிமைக்குழு
உல்லாசப்பயணம் போகும்
எவனாவது"சமாதானப்பேச்சு"
என்று
எதையாவது சொல்லி
பத்திரிகையில்
இடம்பிடித்துக் கொள்வான்;
பத்திரிகைகள்
வழமையான செய்திகளுள்
ஒன்றாய்
இதனையும் சேர்த்துக்
கொள்ளும்
இப்படி இன்னும்
என்னவெல்லாமோ
நடந்து கொண்டிருக்கும்
போது
நான் கவிதை எழுதி
முடித்திருப்பேன்.

# வட மாகாண முஸ்லிம் அகதி மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள். 2.

கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்

சென்ற இதழ் தொடர்ச்சி.......

### 2. அகதிகளின் கல்விநிலை அன்றும் இன்றும்

அகதி முஸ்லிம்களின் இன்றைய கல்விப் பிரச்சினைகளை அடையாளம் கண்டுகொள்ள அவர்கள் அகதியாக்கப்படுவதற்கு முன்னர் இருந்து கல்வி நிலை பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும். இந்த நோக்கில், வடமாகாணத்தில் வாழ்ந்தபோது முஸ்லிம்களின் கல்விநிலை, கல்விவசதிகள், கல்வித்தரம் ஆகியவை இன்று முகாம் சூழலில் பெறப்படுகின்ற கல்வி நிலையுடன் இங்கு ஒப்பிடப்படுகின்றது.

### 2.1 வட மாகாணத்தில் முஸ்லிம் கல்விநிலை

அகதியாக்கப்படுவதற்கு முன்னர் இம்மக்கள் வடமாகாணத்தில் ஏறக்குறைய நூற்றுக்கும் அதிகமான பெரிய, சிறிய கிராமங்களில் வாழ்ந்தார்கள். கிடைக்கக் கூடியதாகவுள்ள கல்விக் குறிகாட்டிகளின் அடிப்படையில் நோக்குகின்றபோது (அட்டவணை 1ஐப் பார்க்க) ஒப்பீட்டு ரீதியாக வடமாகாண முஸ்லிம்களின் கல்வி வசதிகள், கல்வி நிலை, கல்வித்தரம் சிறப்பாகக் காணப்பட்டது. கல்வி வசதி ரீதியாக வடமாகாணத்தில் 48 முஸ்லிம் பாடசாலைகள் காணப்பட்டன. கிராமச் சூழலில் தமது கல்வியைக் கற்கக் கூடிய வாய்ப்புக்களை இம்முஸ்லிம்கள் கொண்டிருந்தார்கள். 48 முஸ்லிம் பாடசாலைகளில் 5 பாடசாலைகள் 1ஏபி என்ற தரத்தையுடைய க.பொ.த (உயர்தர) கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாகவும், முஸ்லிம் பெண் கல்விக்கென இரண்டு தனியான பாடசாலைகளும், எஞ்சிய குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்விவசதிகள் கொண்ட பாடசாலைகளாகவும் காணப்பட்டன. இதனைவிட வடமாகாண முஸ்லிம் மாணவர்கள் பிரபல்யமான தமிழ்ப் பாடசாலைகளிலும் தமது உயர்கல்வியைக் கற்றுத் தேர்ந்து வந்தார்கள் என்பதுவும், அவ்வகையான வாய்ப்புக்களும் அவர்களில் காணப்பட்டது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் முஸ்லிம்களுக்கு கிடைக்கக் கூடியதாகவிருந்த இக்கல்வி வசதிகள், கல்வியில் இம்மக்கள் கொண்டிருந்த ஆர்வம் என்பன இம்மக்களின் கல்வித்தரத்தில் பிரதிபலிப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக, வடமாகாண முஸ்லிம்களின் மாவட்ட ரீதியான எழுத்தறிவு இலங்கையின் தேசிய எழுத்தறிவு (87.2%) வீதத்தை விடவும் இலங்கை முஸ்லிம்களின் எழுத்தறிவு (79.3%)ஐ விடவும் உயர்வாக, சிறப்பாகக் காணப்படுவதை அட்டவணை 1ல் இருந்து அவதானிக்கலாம். அதுமட்டுமன்றி, வடமாகாணத்தில் சில மாவட்டங்களில் மாவட்டச் சராசரி எழுத்தறிவை விட, அம்மாவட்ட முஸ்லிம் எழுத்தறிவு உயர்வாகவும் காணப்படுகின்றது (அட்டவணை 1)

அட்டவணை 01

வடமாகாணத்தில் முஸ்லிம் கல்வி

| கல்வி | தரவு மூலம் | மொத்தம் | மாவட்டம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு |
| **பாடசாலைக் கல்வி** | | | | | | |
| 1. [illegible] பாடசாலை | | | | | | |
| ([illegible]) | பாடசாலைக் கணிப்பீடு, 1991 | 5 | 1 | 3 | | 1 |
| 2. [illegible] பாடசாலை ([illegible]) | பாடசாலைக் கணிப்பீடு, 1991 | 7 | 1 | 4 | 1 | 2 |
| 3. [illegible] பாடசாலை ([illegible]) | பாடசாலைக் கணிப்பீடு, 1991 | 15 | 4 | 7 | 4 | |
| 4. [illegible] பாடசாலை ([illegible]) | பாடசாலைக் கணிப்பீடு, 1991 | 20 | 1 | 15 | 4 | |
| மொத்தம் | | 42 | 7 | 29 | 8. | 3 |
| **கல்வி வளம்** | | | | | | |
| முஸ்லிம் ஆசிரியர்கள் | பாடசாலைக் கணிப்பீடு1991 | 306 | 123 | 216 | 37 | 8 |
| **கல்விப் பெறுபேறு** | | | | | | |
| 1. முஸ்லிம் எழுத்தறிவு | குடிசனக் கணிப்பு 1981 | 79.3 | 86.1 | 65.4 | 62.2 | 82.2 |
| 2. மாவட்ட எழுத்தறிவு ஒப்பீட்டுக்காக | குடிசனக் கணிப்பு 1981 | தேசிய முஸ்லிம் | 58.6 | 85.5 | 65.4 | 60.0 |
| 3. பல்கலைக்கழக மாணவர்கள் | கட்டுரை ஆசிரியரால் சேகரிக்கப்பட்டது 1991. | 48 | 08 | 35 | 4 | 1 |

மூலம்: குடிசனக் கணிப்பு 1981, பாடசாலைக் கணிப்பு 1991, [illegible] 1995.

எழுத்தறிவு மட்டுமல்லாமல், வடமாகாண முஸ்லிம்களின் இடைநிலை, உயர்நிலைக் கல்விநிலைகளும் சிறப்பாகக் காணப்பட்டன என்பதை பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை போன்ற குறிகாட்டிகளின் மூலம் (அட்டவணை 1ஐப் பார்க்க) அவதானிக்க முடிகின்றது.

## 2.2 அகதி நிலையில் முஸ்லிம் கல்விநிலை

### 2.2.1 பரம்பல்

வடமாகாண முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையோர் கடந்த 3 வருடங்களாக அகதிகளாக ''முகாம்களில்'' வாழ்ந்து வருகின்றார்கள். முஸ்லிம் அகதிகளில் மிகப் பெரும்பான்மையானவர்கள் (60%) புத்தளம் மாவட்டத்திலும், எஞ்சியவர்கள் அனுராதபுரம் (20%), குருணாகல் (10%), கொழும்பு, மாத்தளை, பாணந்துறை, மன்னார்த்தீவு ஆகியவற்றிலும் வாழ்கின்றனர்.

### 2.2.2 முகாம் வாழ்க்கை

''அகதி முகாம்'' என்பது தொகுதியான தற்காலிகக் குடிசைகளைக் குறிக்கும். வடமாகாண முஸ்லிம்கள் அகதியாக்கப்பட்டபோது, அபயமளிக்கும் நோக்கத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடிசைத் தொகுதிகளில் கடந்த 3 வருடங்களாக இம்மக்கள் வாழுகின்றார்கள். இவ்வகதி முகாம்கள் சராசரி மனிதத் தேவையிலும் மிகக் குறைந்த வசதிகளைக் கொண்டிருக்கின்றன. அகதிகளின் உணவுத் தேவைக்காக ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் ரூபா 1260/- உலர் உணவுப் பொருட்கள் நிவாரணமாக வழங்கப்படுகின்றன.

### 2.2.3 பாடசாலைக் கல்வி:

அகதி முஸ்லிம்களின் பாடசாலைக் கல்விக்கென தனியான ஒழுங்குகள் எதுவும் செய்யப்படவில்லை. அகதிகள் தமது சூழலில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அகதி முகாம் சூழலில் உள்ள அரசாங்கப் பாடசாலைகள் உள்ளூர் மாணவர்களின் கல்வித் தேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி, உபகரணவசதி, ஆசிரிய வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

இன்று அகதி அந்தஸ்துடன் உள்ள மாணவர் கூட்டுத்தொகையால் இவ்வுள்ளூர்ப் பாடசாலைகளின் இடவசதியின்மை, தளபாட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்துக் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகள் பாடசாலைகளில் மட்டுமல்ல, அகதி உள்ளூர் மக்களுக்கிடையிலான மனக்கசப்பிற்கும், பகைமைக்கும் வித்திட்டு வருகின்றன.

அதனால், அகதிகள் செறிவு கூடிய புத்தளம் மாவட்டத்தின் பல பாடசாலைகள் வழமையான பாடசாலை நேரத்தில் அகதி மாணவர்களையும் சேர்த்துக் கற்பிக்கக்கூடிய ''வசதிகள்'' இன்மையால், அகதி மாணவர்களுக்கென மாலைநேர வகுப்புக்கள் 2மணியில் இருந்து 5மணிவரை 'அகதி ஆசிரியர்களை'க் கொண்டு நடாத்தப்படுகின்ற தன்மை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*2.2.3 பாலர் பாடசாலை:*

பாடசாலை செல்லும் வயதை அடையாத அகதி மாணவர்களின் கல்விக்காக முகாம் சூழலில் பாலர் பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்பாடசாலைகள் தனியார் உதவி ஸ்தாபனங்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. மிக அண்மைக் காலத்திலேயே இக்கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேசத்தில் 'போரூட்' தனியார் நிறுவனத்தாலும், புத்தளம் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் ஆர்.டி.எப்., ஐ.வி.எஸ். போன்ற நிறுவனங்களாலும் சில குறித்த முகாம்களில் நடாத்தப்பட்டு, தற்போது பரவலாக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மொத்த அகதி மாணவர்களில் ஏறக்குறைய 35% மாணவர்கள் மாத்திரமே பாலர் பாடசாலைகளால் நன்மை பெற்று வருகின்றனர்.

*2.2.5 குர்ஆன் மத்ரஸாக்கள்:*

அகதி முகாம் பொறுப்பாளர்களால் முகாம் சூழலில் முஸ்லிம் உதவி ஸ்தாபனங்களின் உதவியோடு குர்ஆன் மத்ரஸாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

*3. அகதி மாணவர்களின் அடையாளப்படுத்தப்பட்ட கல்விப் பிரச்சினை*

அகதி மாணவர்களின் கல்விப் பிரச்சினையானது கிடைக்கக் கூடியதாக உள்ள கல்விவசதி, அகதிப் பெற்றோரின் பொருளாதார, உளவியல், தகுதித் தன்மை, மாணவனின் பாடசாலை, முகாம் கல்விச் சூழல்களால் தீர்மானிக்கப்படுகின்றது. அதே நேரத்தில், மேற்குறித்த கல்விப்பிரச்சினைகள் பிரதேச ரீதியான வேறுபாட்டையும் கொண்டுள்ளன.

*3.1 அகதிகளின் கல்வியைப் பாதிக்கும் அடிப்படைக் காரணிகள்:*

அகதிகளின் பொருளாதார அடிப்படை, சராசரி குடும்பப் பொருளாதாரப் பலத்தைவிட பலவீனமானது. வடமாகாணத்தில் வாழ்ந்த போது இம்மக்களுக்கு ஒரு ஸ்திரமான பொருளாதார அடிப்படை காணப்பட்டது. இப்பொருளாதார அடிப்படை விவசாயமாக, வர்த்தக நடவடிக்கைகளாக, நிச்சயப்படுத்தப்பட்ட கூலி வேலையாக வேறுபடுத்தப்பட்டு காணப்பட்டது. எவ்வாறாயினும், தமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்தும் திறமையை இம்மக்கள் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமன்றி வாழ்வதற்குப் பொருத்தமான வீட்டுச்சூழலும், நன்மை தீமைகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய கிராமியச் சமூகச் சூழலும் இம்மக்களுக்கு இருந்தன.

பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது இம்முஸ்லிம்கள் தமது சொத்துக்களையும் தீவிரவாதக் குழுவிடம் பறிகொடுத்தார்கள். அத்துடன் தமது பொருளாதார அடிப்படையிலிருந்தும் பிரிக்கப்பட்டார்கள். கூடி வாழ்ந்த கிராமியச் சமூக உறவின் சூழலையும் இழந்து அகதி முகாம்களில் சிதறி வாழவேண்டிய சூழ்நிலைக்காளானார்கள். இது அகதிக் குடும்பப் பொருளாதார ஸ்திரத்தில் மிகவும்

பாதிப்பை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், நாளாந்த வாழ்க்கைக்கு பிறரை நம்பிவாழ வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கும் இட்டுச்சென்றது.

அகதி முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தால் உணவு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. இந்நிவார ணம் ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடுப்பத் துக்கான மாதாந்த நிவாரண உதவி 1260/- ரூபாவாகும். இதைவிட அரசாங்கம் சாராத உதவி நிறுவனங்களால் மாதாந்தம் சராசரி 250/- ரூபா குடும்பத்துக்குக் கிடைக்கின்றது. நிவாரணமாக அகதிகளுக்குக் கிடைக்கும் உணவு உதவிகள் இலங்கையின் தலாவருமானத்தோடு ஒப்பி டும்போது மிகக் குறைவானது.

அகதிகளின் நாளாந்த வாழ்க்கைக்கு உலர் உணவைத் தவிர்ந்த வேறு வகை (இறைச்சி, மீன், மரக்கறி போன்றவை) உணவுப் பொருட்களும் அவசியமாகக் காணப்படுகின்றன. அத்தோடு, பாடசாலை செல்லும் குழந்தைகளின் உணவு, பாடசாலை உடைகள், உபகரணங்கள், பிரயாணச் செலவுகளும் காணப்படுகின்றன. ஆயின், தமது குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்ள அகதிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆண், பெண், சிறார்கள் என்ற பேதமின்றி, கிடைக்கின்ற கூலி வேலைகளில் ஈடுபட்டு, தமது நாளாந்த வாழ்க்கையை இம்மக்கள் கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். இரண்டு பிரதான வழிகளில் பொருளாதாராப் பலவீனம் அகதிச் சிறார்களின் கல்வியைப் பாதிக்கின்றது. ஒருபுறத்தில் குடும்ப வருமானப் பற்றாக்குறையால் குழந்தைகளின் கல்வி மறைமுக மாகப் பாதிக்கப்படுகின்றது. அதேவேளை, பாடசாலை செல்லும் வயதையுடைய குடும்ப அங்கத்தவர்களும் கூலி வேலைகளில் ஈடுபட வேண்டியதாக இருக்கின்றமை, அவர்களின் கல்வியை நேரடியாகப் பாதிக்கின்றது.

அகதிகளின் பொருளாதார ஸ்திர மின்மைக்குச் சமனாக அவர்களின் உளவியல், வாழ்விடச் சூழல் காரணிகளும் அகதிச் சிறார்களின் கல்வியைப் பாதிக்கின்றது. அகதிகள் ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்தில் வாழ்ந்து கொண்டடுருக்கிறார்கள். இது இவர்களின் எதிர்காலக் குடும்பத் திட்டமிடலுக்கும், குடும்ப அபிவிருத்திக்கும் எதிராகக் காணப்படுகிறது. ஒரு சமுதாயத்தில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, அச்சமூகத்தின் எதிர்காலதிற்கான முதிலீடாகும். அகதிச் சமுதாயத்திலோ நிச்சயமற்ற எதிர்காலத்தைக் கொண்ட அகதிகள் தியாக அடிப்படையில் தமது குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் கருத்துச் செலுத்தக்கூடிய மன நிலையற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

அகதிகளின் பலவீனமான உள்ளத்துக்கு மேலும் உரமிடுவதாக, அகதி முகாம்களின் கல்விச் சூழல்கள் காணப்படுகின்றன. அகதி மக்கள் நிம்மதியாக உறங்குவதற்கு ஓர் உறைவிடம் இல்லாத நிலையில், தமது குழந்தைகளின் கல்வி வசதிக்கான ஒழுங்குகளை முகாம் சூழலில் எவ்வாறு செய்து கொடுக்க முடியும்? அத்துடன், இன்று நடைமுறையில் உள்ள ''அகதிக் கலாசாரம்'' சராசரி மனித வாழ்க்கை, சமூகச் சூழல், கலாச்சார சூழல் அபிவிருத்திக்கு எதிர்மறையாகக் காணப்படுவதும் அகதி முஸ்லிம்களின் கல்வியைப் பாதிக்கும் இன்னுமொரு அம்சமாக விளங்குகின்றது. மேற்குறித்த காரணிகள், அகதி மாணவர்களை ஆரம்பக் கல்வியில் இருந்து உயர்கல்விவரை தாக கத்தை ஏற்படுத்துவதை நிதர்சனமாக இன்று அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

(தொடரும்)

# ஊர் போகிறேன்

தாளாவி' பரீகரன்

சூரியனின் பொற்கிரணங்கள் பூமாதேவியை தொட்டுத்தழுவ இன்னும் சில மணி நேரங்களே உள்ளன என்பதற்கு அடையாளமாக பக்கத்துத் தெருவிலிருக்கும் பெரிய பள்ளிவாயலில் பாங்கோசை மிகத் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் அந்த இனிய பாங்கோசைதான் என்னைத் துயிலெழுப்பும். அதன் பின்புதான் என் அன்றாட அலுவல்கள் ஆரம்பமாகும். ஏனோ தெரியவில்லை, சில நாட்களில் மின்சாரத் தடையினால் பாங்கோசை என் காதுகளில் விழா விட்டால், அன்றைய நாள் ஒழுங்காக விடிந்து, முடியாதது போன்ற ஏக்கப் பெருமூச்சு எனக்குள்ளிருந்து வெளிப்படுவதை நான் உணர்ந்திருக்கிறேன். அப்படி ஒரு இணைப்பு அந்த பாங்கொலிக்கும் எனக்கும்.

இத்தனைக்கும் அந்த பாங்கின் பொருளை எனக்கு யாரும் கூறவும் இல்லை. கேட்பதற்கு வெட்கப்பட்டு என்னோடு பழகும் முஸ்லிம் நண்பர்களிடம் கேட்கவும் இல்லை. நான் சிலவேளைகளில் யோசிப்பதுண்டு. இந்த ஒலியில் அப்படி என்னதான் ஈர்ப்பு சக்தி இருக்கிறதோ என்று. ஆனால் என் மார்க்கத்தின் மீதுள்ள பற்று என்னை இப்படியான சிந்தனைகளிலிருந்து திருப்பிக் கொள்ளும். என்னைப் பொருத்தவரையில் எனது இந்துமதத்தை கண்டிப்பாகப் பின்பற்றுபவன் நான்.

தொடர்ந்தோடிக் கொண்டிருந்த சிந்தனைக்கு திரையிட்டுவிட்டு, காலைக்கடன்களை முடிப்பதற்கு வெளியேறுகிறேன்.

சரியாக நேரம் ஏழு மணி. வழமை போல் பத்துவருடங்களாகப் பழக்கப்பட்ட கால்கள் அந்த எழில் கொஞ்சும் கிராமத்தின் பாடசாலையை நோக்கி நடக்கின்றேன். ஆம் அங்குதான் நான் எனது முதல் நியமண நாள் தொடக்கம் இன்றுவரை ஆசிரியப் பணி புரிந்துகொண்டிருக்கிறேன். இந்தப் பத்துவருட காலத்துள் எத்தனை கலவரங்கள் அதுவும் ஒருமிரும் ஈருடல்களும் போன்றிருந்த தமிழ் முஸ்லிம் மக்கள் கிழக்கில் மோதிக் கொண்ட சந்தர்ப்பங்கள் அந்த மோதல்களின் சேதங்களையும், கொலை செய்யப்பட்ட பிரேதங்களையும் தொலைக்காட்சி பெரிதாக ஒளி+ஒலி பரப்பும். அப்போது எனக்கு மெல்லியதாய் மயிர்க்கூச்செரியும். அச்சம் இலேசாகக் குளிர்தாவுவது போலத்தாவும். ஆனால் இங்குள்ள குடிகள் அப்படியொன்றும் என்னைப் புண்படுத்தும் வகையில் கூறியதாக எனக்கென்றால் நினைவில் இல்லை. அந்தளவிற்கு என்மீதான அபிமானமும் மரியாதையும் அவர்களுக்கு என்பதைக் கண்டு நான் பெருமைப்படுவதுண்டு.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எனது முதல் நியமண நாள். இந்த ஊரின் பெயரை கல்விப் பணிப்பாளர் கூறி, சிறு அறிமுகம் தந்தார். "என்ன சேர் சிங்கள ஊர் போலிருக்கிறதே" என்றேன் "அந்த மாவட்டத்திலேயே தமிழ் புலங்குகின்ற பெரிய ஊர். முஸ்லிம்கள்தான் அதிகம் அங்கே வாழ்கிறார்கள். சூழ சிங்கள ஊர்கள் நடுவில் இந்த ஊர்" என்றார் அவர் ஏற்கனவே சிங்கள மக்களைப் பற்றி பயங்கரமாகக் கேள்விப்பட்டிருந்த நான் எப்படித்தான் இவர்களால் இப்படி வாழ முடிகிறதோ என்று எண்ணினேன். என் கூட வந்த மூத்தண்ணாவுக்கு என்னை தனியே விடப் பிரியமில்லை. "சேர் எப்படிசேர் வேறோர் மாவட்டத்தில், அதுவும் பின்தங்கிய பாடசாலை போல் தெரிகிற இதில் போய், தமிழ்ச்சனமே இல்லை. என்று வேறு சொல்கிறீர்கள். வேலை செய்வது நம்மட மாவட்டத்திலேயே பார்த்து ஒரு சிறிய

பாடசாலையைப் போட்டுத் தாங்கள் சேர்" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டார். "சிஸ்டர் நீங்கள் முதலில் போய்ப்பாருங்கள். சரியில்லை என்றால் எனக்கெழுதுங்கள் மாற்ற விஷயத்தை நானே செய்து தருகிறேன்." என்ற பணிப்பாளரின் வார்த்தையை நம்பி மாற்றலாகிப் போய்விடலாம் என்ற எதிர்பார்ப்பில் வந்தவள் தான் நான். இப்போது பத்து வருடங்களாகியும், போவதற்கு மனமின்றி வாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறது.

"எக்ஸகியூஸ்மி ரீச்சர்" என்ற குரல் எனைத் தடுத்து நிறுத்துகிறது. பக்கத்தில் ஒரு மானவி நாங்கள் நாளைக்கு ஊருக்குப் போகிறோம். பிரச்சினைகள் ஒன்றும் இல்லையென்று சொந்தக்காரர்கள் கடிதம் போட்டிருந்தவங்கள். அதனால தங்கள் இடம் தானே தங்க பூமி. நாங்கள் போறம் டீச்சர். கற்பிட்டி போய், படகில்தானாம்போக வேண்டுமாம்." பேசிக்கொண்டிருந்தாள் அவள். எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. நெஞ்சுக்குள் ஏதோ நெளிவது போலும், தொண்டைக்குள் நெறுஞ்சி மாட்டியது போலவும் ஒரு நிலை. அது வேதனையா, துயரா துன்பமா என்று புரியவில்லை.

ஏனென்றால் அவர்கள் யாரால் விரட்டப்பட்டார்களோ அந்தச் சமூகத்தின் ஒருத்தி நான். ஆயுதங்களே விரல்களுக்குப் பதிலாக சுட்டிப்பேசுகின்ற அவர்கள். வரச்சொல்லியிருந்தால் பிரச்சினை தீர்ந்ததாகப்படும். அதுவும் இல்லை. மிருகங்களை நம்புவது கூடாதுதானே. புலிக்குத் தீனி போட்டாலும் பசி வந்தால் கடித்துக்குதறத்தானே செய்யும். நான் மௌனமாக நின்றிருந்ததைக் கண்ட அம்மாணவி "நான் போய் நிலையைப்பற்றி கடிதம் எழுதுகிறேன்." என்றவுடன் ஏதும் கூறத்தோன்றாதவளாய் "நன்றாகப் படியுங்கள் அஸ்மியா எந்தச் செய்தியையும் விட உங்கள் சிறந்த பெறுபேற்றைக்கண்டு தான் நான் மகிழ்வேன்." என்று கூறி வழியனுப்புகிறேன்.

அவள் போய்விட்டால், மனம் ஏதோ உறுத்தலில் வேதனைப்படுகிறது. உயர்தர வகுப்பிற்கு தமிழ்ப்பாடம் நிதானமாய் நடந்து போய் வகுப்பில் நிற்கிறேன். தமிழ் எடுப்பவர்களில் ஒரு மாணவன் மட்டும்தான் வகுப்பில் இருக்கிறான். ரீச்சர் அடுத்தவர்கள் எல்லோரும் ஊரிற்குப் போய்விட்டார்கள். நேற்று ஞாயிற்றுக் கிழமை உங்களைக் காணமுடியாததனால் ஸிராப் உங்களுக்கு ஒரு கடிதம் தந்துவிட்டுப் போயிருக்கிறார். ரீச்சர் என்று கடிதத்தை தர, கையிலெடுத்துப் பிரிக்கிறேன். நான் பரிசளித்த அந்தப் பேனாவால் அவன் எழுதியிருப்பதை முதல் கண்டுகொள்கிறேன்.

என்றும் அன்புடன்,
என் உங்களுக்கு!....

நா(ன்) நாங்கள் போகிறோம். வருகிறோம் என்று கூறி விடைபெற நான் விரும்பவில்லை. நாங்கள் விரட்டப்பட்டு மூன்றாண்டு கழித்து அகதி முகாம்களின் துன்ப நினைவுகளுக்கிடையில் உங்களோடுடனான இன்ப நினைவுகளோடு விடை பெற்றுச் செல்கிறேன்.

தமிழ் மொழியைப் பேசுவதால் எமக்கிடையில் பிரிவுகள் வராது. அத்தோடு இரு சமூகமும் சிறுபான்மைச் சமூகம் தானே, என்றிருந்தேன். இல்லை இல்லை இது கலியுகம். எமக்கு நடந்த கதி உலகில் எந்தவொரு அகதியாக்கப்பட்டவர்களுக்கும் நிகழ்ந்திருக்க முடியாது. இருபத்து நான்கு மணித் தியாளங்களுக்குள், வெறுங்கையுடன், ரத்தத்தை மண்ணில் தெளித்து சேர்த்த சொத்துக்களை வைத்துவிட்டு வெளியேறுவதென்றால் அதுவும் வாகன வசதி இன்றி நடந்து வடக்கைவிட்டு வெளியேறுவதென்றாலேயே மூன்று நாட்களுக்கு மேல் வேண்டுமே! என்ன செய்வது எங்கள். தலைவிதி. இனி மேல்தான் அதை மாற்றுவது பற்றி யோசிக்க வேண்டும்.

ரீச்சர் உங்களைப் போன்றவர்கள் தமிழ்ச்சமூகத்தில் இலலாமலில்லை. ஆனால் அவர்கள், விலங்கிடப்பட்டவர்கள் கருத்துக் கூட சொல்வதற்கு உரிமை மறுக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த

ஊரிற்கு வந்த அன்று நீங்கள் வடக்கைச் சேர்ந்தவர் என்று கேள்விப்பட்டவுடன் சந்திக்க வந்ததேனே அதுதான் எங்கள் பலவீனமோ என்று நினைக்கிறேன். யாரால் விரட்டப்பட்டோமோ அவர்கள் தான் அந்தக் கொடுஞ்செயலின் சூத்திரதாரிகள், அவர்களை சேர்ந்த சமூகம் அல்ல என்பதுதான் எங்கள் கணிப்பு.

ஆனால், மாறி மாறி பேட்டிகொடுக்கும் வடக்கின் ஆயுத மனிதர்களோ கிழக்கில் நடந்த சம்பவங்களை வைத்துத்தான் உங்களை வெளியேற்றுகிறோம் என்றனர். நீங்கள் உயிரோடு திரும்பிச் செல்வது எங்கள் மனிதாபிமானம் என்றனர். பாருங்கள் எங்கள் பலவீனத்தையும் அவர்களது பலத்தையும் நாங்கள் வழுக்கின்ற இடம்தான் அவர்கள் வலுவாய்ப் பிடித்துக்கொண்ட இடம்.

இனிமேலும் நாங்கள் அப்படித்தான் இருப்போம் ஏனென்றால் இஸ்லாத்தின் வழிகாட்டல் அப்படித்தான் உள்ளது. எனவே நான் என்றும் உங்களை நேசிப்பேன். சிலவேளை எங்களை அவர்களது துப்பாக்கிகள் விசாரிக்கலாம். இறுதியில் அவை என்மீது தோட்டாக்களால் கர்ஜிக்கலாம். ஒரு சமூகம் தனது இழப்பை வைத்துத்தான் அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது. எனவே இனி எனது வேலை இழப்புகளான மூலதனங்களை இளைஞர்களைத் தேடுவதாக இருக்கலாம். நிச்சயமாக இஸ்லாம் எல்லாவற்றிற்கும் வழிகாட்டலைத் தந்துள்ளது. அதன்படிதான் நாமிருப்போம். இன்னும்கூட துப்பாக்கிகளைவிட மனிதாபிமானத்தில்தான் எனக்கு நம்பிக்கை.

மீண்டும் தொடர்கிறேன். இப்போது பாடத்தைத் தொடருங்கள்.

நன்றி- வணக்கம்.

இவ்வண்ணம்
உங்கள் பிரியமுள்ள
ஸிராப்

வாசித்து மடித்து வைத்துவிட்டுப் பார்க்கிறேன். ரீச்சர் கடிதம் என்று ஒரு மாணவன் கடிதத்தை தருகிறான். உடைத்துப் பார்க்கிறேன். எனக்கும் இடமாற்றக் கடிதம் வந்திருக்கிறது.

*4ம் பக்கத் தொடர்ச்சி......*

*மாலை நேர ரியூசன் வகுப்பு என்பது ஒரு குறிப்பிட்ட பாடத்தை, குறித்த ஓரிரு மணித்தியாலங்களுக்கு மாத்திரம் கற்றுக் கொள்வதுதான். அதுவும் ஆருதலாக மதிய உணவு உண்ட பின்புதான் மாலை நேர ரியூசன் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.*

*இங்கோ... பாவம் பிள்ளைகள் சுடு சோத்தை அவசர அவசரமாக அள்ளி வாய்க்குள் போட்டுக் கொண்டு ஒரு மணிக்கு முன்பாக பாடசாலை வாசலுக்கு ஓடி விடுகின்றனர். 11 மணி முதல் - 5.30 மணி வரை பாடசாலை நடைபெறுகிறது. இந்த அவகாச நேரத்துக்குள் நேரசூசியில் ஒன்பது பாடங்கள் போடப்பட்டு பாடத்திட்டப்படி கற்பித்தல் கற்றல் பூரணமாக நடைபெறுகிறது. என்று எந்த ஒரு நல நோக்காளர்களும் வாதிக்க முடியுமா..?*

*முடியாதே... முடியாது...*

*நமது பிள்ளைகளுக்கு நாமே நல்லூக்கத்துடன் கற்பிக்க வேண்டும் என்றும்.... ''நாங்கள் கற்றோர் சமுதாய சந்ததியினர் கல்விக்கு ஊக்கம் கொடுப்போம்'' என்றும் கற்பி ப்போரும், (ஆசான்களும்) கற்போரும் (மாணாக்கரும்) முயன்று நின்றாலும் நேரம் பொருத்தமில்லை. என்பதே எமது கருத்து.. இடவசதி, கட்டிட வசதி, தளபாட வசதி ஆசிரியர் வசதி என்பவற்றை அரசு தீவிரமாக செய்யாதுவிடத்து பொதுவாக இலங்கையின் எதிர்கால கல்விப்பயன் தோல்விகாணும் நிலையையே தரும் என்பதில் ஐயமில்லை..*

# அகதிகளுக்கான கல்விச் சிந்தனை

-அபூஹிஷாம்

அன்புள்ள எனதருமை முஹாஜிரீன்களே,

நமது பிறந்த மண்ணிலிருந்து நம்மை வெளியேற்றுவதற்கான மூலக்கரு இன்று நேற்று அல்லது 1990 அக்டோபர் 30ல் தோன்றியது அல்ல. இது திட்டமிட்டு காலத்துக்குக் காலம் செய்யப்பட்டே வந்தது. அதன் கொடு முடியாகவே இறுதி வெளியேற்றம் இடம் பெற்றது.

நமது இறுதி வெளியேற்றத்துக்கு அரசும் கூட துணை போயிருக்கிறது. என்பது தான் வேதனை மிக்க விடயம். எதிர்கால எமது பிரசைகளின் கல்வி பற்றிச் சிந்திக்கும் கட்டத்தில் நாம் இருக்கின்றோம். எவ்வித அரசியல் கலப்புமின்றி சுதந்திரமாக எழுதப்படும் கருத்துக்கு செவிசாய்க்கும் வண்ணம் தாழ்மையுடன் சேர்த்துக் கொள்கிறேன்.

1990லான எமது வெளியேற்றத்தின் பின்னர் தெற்கு வாழ் முஸ்லிம் சகோதரர்கள் நல்லதொரு படிப்பினையைப் பெற்றிருக்கிறார்கள் என்பது வரவேற்கக் கூடிய விடயமேயாகும்.

1. முஸ்லிம் கிராமங்கள் பலவற்றில் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கொருமுறை குத்பாப் பேருரைகள் சிங்களத்தில் ஆற்றப்படுகின்றன.

2. கணிசமான அளவு இஸ்லாமிய சிறுவர் சிறுமியர் தமது கல்விப் போதனா மொழியாக சிங்களத்தை அல்லது ஆங்கிலத்தைக் கைக் கொண்டுள்ளனர்.

3. முன்பெல்லாம் துணிவுடன் தமிழ் பேசிய முஸ்லிம் ஆண்களும் பெண்களும் போக்குவரத்துச் சாதனங்களில் பயணம் செய்யும் போதும், வீடுகளில் பேசும்போதும் தமிழைப் புறக்கணிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

இந்த நிலை ஏற்பட்டமைக்கான காரணம்:

1. காலம் காலமாக தமிழர்களால் முஸ்லிம்களின் முன்னேற்றம் தடைப்பட்டமை குடியேற்றம், தொழில்வாய்ப்பு, பரீட்சைகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமிழ் உயர் அதிகாரிகள் மாற்றாந்தாய் மனப்பான்மையே காட்டினர். உயர்கல்வி நிறுவனங்கள் சட்டக்கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஆகியாவற்றிலும் நடைபெறும் இறுதித் தேர்வுகளில் தகுதியிருந்த போதிலும் முஸ்லிம்கள் என்ற காரணத்தால் புறக்க ணிக்கப்பட்டனர். புள்ளிகள் அவர்களுக்குக் குறைவாகத் தரப்பட்டன. இதனால் பல்கலைக் கழகங்களில் சிறப்புப் பாட நெறியினைப் பயின்றாலும் முதலாம் வகுப்புச் சித்தியோ அல்லது உதவி விரிவுரையாளர்களாகச் சேர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பமோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை இதனால் சிறப்புத்துறை யைப் பின்பற்றாது விட்டனர்.

2. எங்கெல்லாம் தமிழ் மேலதிகாரிகள் இருந்தார்களோ அங்கெல்லாம் முஸ்லிம்களுக்கு அநீதிகள் இழைத்தனர்.

3. தமிழ் அரசியல் தலைவர்கள் கூட முஸ்லிம்களுக்கெதிரான இன வாதப் போக்கினைக் கையாண்டனர்.

4. தமிழ் மொழியைக் கற்காது அல்லது உயர் கல்விகளுக்கான மொழியை ஆங்கிலமாக ஆக்கிக் கொண்ட முஸ்லிம் கல்வி மான்கள் உயர் பதவிகளைப் பெற்ற அதே வேளையில் தமிழ் மொழியில் கற்ற கல்விமான்கள் தமிழ் உயர் அதிகாரிகளாலேயே புறக்கணிக்கப்பட்டனர்.

5. காலம் காலமாக பன்னிரெண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த முஸ்லிம்களின் அனைத்து சொத்துக்களும்

சூறையாடப்பட்டு உடுத்த உடையுடன் மட்டும் வெளியேற்றினர்.

6. 1958,1983ஆம் ஆண்டுகளில் நாட்டில் தலைவிரித்தாடிய வன் செயல், வகுப்புக்கல வரங்களின் போதெல்லாம் பெரும்பான்மை இனத்தவர்களால் தமிழர்கள் கொல்லப பட்டபோது அவர்களைப் பாதுகாத்து, அவர்கள் சொத்துக்களைப் பாதுகாத்து உதவியவர்கள் முஸ்லிகள் என்ற நன்றியை முற்றாக மறந்து பச்சிளம் பாலகர் முதல் படுமுதிர்கிழவன் கிழவி, பெண்கள் ஈறாக இரவோடு இரவாகக் கொன்று வேட்டையாடினர். மட்டக்களப்பு, பொலன்ன றுவை, ஏறாவூர் ஆகிய இடங்களில் இடம் பெற்ற இன சங்கார நடவடிக்கைகளுக்கு தமிழர்கள் காரணமாயிருந்தனர்.

7. இதனால்தான் தமிழின் மீதும் தமிழினத்தின் மீதும் முஸ்லிம்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். தமிழ் கற்பது பேசுவது அனைத்தும் அநாகரி கமானது என்று எண்ணுகின்றனர். எனவே, எதிர்காலத்தில் முஸ்லிம்கள் தமது பிள்ளைகளுக்கு எம் மொழியில் போதிப்பது என்ற கேள்வி எழுகிறது. சிங்களத்தைக் கற்று சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களுடன் போட்டியிடுவது என்பதும் சிரமமானதே. எனினும் சிங்கள் மொழி மூலம் பயின்ற அதிகமானவர்கள் விரிவுரை யாளர்களாக, அமைச்சர்களாக, சட்டத்தர ணிகளாக, நீதிவான்களாக, உயர்நிர்வாக அதிகாரிகளாக இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய தொன்றாகவே கருதலாம்.

எமது சமூகத்தின் சமூக சேவை இயக்கங்கள் கொடை வள்ளல்கள், கல்விமான்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயலுருக் கொடுத்தால் நம்மால் முடியாதது ஒன்றில்லை. முஸ்லிம்க ளாகிய நாம் திறமை குறைந்தவர்களல்ல.

1987, 1988,1989ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டக் கல்வித் திணைக்களம் எடுத்த புள்ளி விபரங்களின் படி யாழ்ப்பா ணத்திலுள்ள ஐம்பது கொத்தணிகளுக்குள்ளும் க.பொ.த.ப. (சா/த) தேர்வில் தமிழ் மொழியிலும், சமூககல்விப்பாடத்திலும், ஒஸ்மானியா, கதீஜா மகா வித்தியாலயங்களைக் கொண்ட யாழ்ப்பாண நகர மேற்குக் கொத்தணியே முதலிடம் பெற்றமை எதனைக் காட்டுகிறது. எமது மாணவர்கள் தமிழர்களை விடவும் திறமைசாலிகள் என்பதைத்தானே.

எனவே, எந்த மொழியையும் இலகுவாகக் கற்கும் ஆற்றலை அல்லாஹ் இஸ்லாமி யர்களாகிய எமக்குத் தந்துள்ளான்.

அடுத்து, இன்று உலகம் வெகுவாகச் சுருங்கி வருகிறது. உலக மொழியாக, வர்த்தக மொழியாக ஆங்கிலம் ஆகிவிட்டது. எனவே, வேலை வாய்ப்பு, உயர் கல்வியில் பாரபட்சமின்மை ஆகியவற்றை மனதில் கொண்டு முஹாஜிரீன்களாகிய நாமும் அன்சாரீன்களாகிய ஏழு மாகாண முஸ்லிம்களும் தமது போதனா மொழியாகிய ஆங்கிலத்தையே கொள்ள வேண்டும். எமது தனித்துவமான திறமைகளை வெளிக் கொணர இதுவே ஏற்ற வழியாகும்.

அன்புள்ள அரசியல் வாதிகளே,

உங்களுக்கு நிலையான கொள்கை இல்லை இன்று தூற்றுபவரை நாளை போற்றுவீர்கள் உங்களின் சமுதாயம் பற்றிய தீர்மானங்கள் யாவும் உங்களின் பதவிகளைக் காக்கும் புள்ளடிகளால்தான் தீர்மானிக்கப்படுகின்றன எமது சமுதாயத்தின் எதிர்கால அவலநிலை பற்றிச் சிந்திக்கும் நிலையில் நீங்கள் இல்லை எனவே, கல்விமுறை போதனா மொழி பற்றிய சிந்தனைகள் உங்களுக்கு ஏற்படுவதே இல்லை.

அன்புள்ள ஆசிரிய நண்பர்களே!

கல்வி பற்றி ஓரளவு சிந்திக்கக் கூடிய நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்களும் தமிழ்ப் பேரினவாதத்தாலும், சிங்களப் பேரினவாதத்தாலும் பாதிக்கப்பட்டே இருப்பீர்கள். உயர்கல்வி வாய்ப்புக்களில் பதவி உயர்வுகளில் புலமைப்பரிசில்கள் பெறுவதில் எல்லாம் நீங்கள் முஸ்லிம்கள் என்றதால் புறக்கணிக்கப்பட்டிருப்பீர்கள். அந்த நிலை நமது எதிர்கால சந்ததிக்கு ஏற்படவே கூடாது என்பதில் என்னுடன் ஒத்த கருத்தைக் கொண்டிருப்பீர்கள் எனவே, முஸ்லிம்களாகிய நாம் எமது போதனா மொழியாக ஆங்கிலத்தையே கொள்வோம் அதற்காக ஏற்ற நடவடிக்கை எடுப்போம்.

அடுத்த இதழிலிருந்து ''ஏகத்துவத்துக்கு இரண்டு மணிநேரம்'' என்ற தலைப்புடன் சந்திக்கின்றேன். (இன்ஷா அல்லாஹ்)

(இக்கட்டுரை தொடர்பான கருத்துக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.)

*"அகதி"யின் கடைசிப் பக்கம் அரபு மூலத்திலிருந்து ......*
*( அரபு மூலம் -முஹம்மது அஹமது பதீஸ)*

## சூரியத் தழுவல்

★ **சுடுகின்ற என் சூரியப்பாட்டியே ... உதயத்து வந்தனம்!**
■ **மகனே.. வா.. உனக்கும் என் வந்தனம்!**
சூரியப்பாட்டி புன்னகைக்கிறாள்.. அவளின் புன்னகையில்...
எழுபது வருஷவண்டிச் சில்லுகளின் பாரமான தடங்கள்.

பொருள் பொதிந்த கனவுகள், கனக்கின்ற ஆசைகள்.. எல்லாம்.. அவளின் முகத்துப் புன்னகையில் பாட்டி பேசுகிறாள்...

பிறந்தகம் நோக்கிய வழக்கமான என் காலைப் பயண வேளைகளில் "அவனை" நான் நெருங்குகிறேன். தோள்களில் என்னைச் சுமந்துகொள்வான்" என்ற ஆவலோடும்.. ஓடைகள் சுமந்த நாட்டின் மேற்கொண்ட காதலால் துடிக்கும், அவன் நெஞ்சில் என்னை அணைத்துக் கொள்வான் என்ற ஆசையோடும் அவளிடம் நான் நெருங்குகிறேன். அவன் நேசிக்கும் பூமி தியாகிகளின் ரத்தத்தில் குளித்திருக்கிறது. என் சிறிய தந்தை ரத்தத்தை தானம் செய்து இறந்துபோனார்...! அவளின் கணவன், ரத்தத்தை சில்லறை தர்மம் செய்து காயப்பட்டுக் கொண்டான். விழிகளுக்கிடையில் விரிந்திருந்த என் நெற்றி வெளியில் முத்தவிதைகளை தூவியவளாக பாட்டி சொல்கிறாள்....

■ **அன்பு என்பது பூரணப்படுத்தப்பட்ட வாக்குறுதி.**
★ **பாட்டியே அது உணர்வுகளின் ஓசையல்லவா...? இதய ஆழங்களில் ஏற்படும் காயமல்லவா...?**

இனிமையான பள்ளியெழுச்சிகளோடு எங்கள் உரையாடலைக் கேட்டவாறு பறவைகள் துள்ளித் திரிந்து கொண்டிருக்கின்றன.

■ நேசத்தைத் தவிர இதயத்தில் எதுவும் மிஞ்சாது மகனே. கண்களை மூடியவாறு நினைவு வீணைகளை மீட்டியவளாக தன் காதல் கதையை நினைவுபடுத்திக் கொண்டிருந்தாள்...! இமைகளின் இதழ்விரிப்பின் பின்....

■ மகனே.. அன்பு என்பது உனக்கு என்னவாய்த்தோன்றுகின்றது....?

அவளின் இந்தக் கேள்வியால் இறைவன் மனிதர்களுக்களித்த இயற்கை அறிவும், சிந்தனையும் அவளிலும் இருப்பதை அறிகிறேன். நான் அவளுடன் உரையாடும் போது... பலநூறு புத்தகங்கள் வாசித்தவனாக.. என் பாட்டி வாழ்ந்த நீண்ட வருஷங்களில் நானும் வாழ்ந்து, வாழ்க்கை அனுபவங்களையும், உணர்வுகளையும், உண்மைகளையும் அறிவுகளையும் பெற்றவனாக நான் இருப்பதைப்போல் உணர்கின்றேன். அவளின் கண்களை உற்றுநோக்கியவனாய்க் கூறுகின்றேன்.

★ **சிலவேளைகளில் அன்பு என்பது கட்டுக் கதையைப் போல் இருக்கிறது. இன்னும் சிலவேளைகளில்..... அனைத்துக்கும் துடிக்கின்ற இதயத்தில் இதமாய்த் தெரிகிறது.**
■ **இரண்டாவதாக என்ன சொன்னாய் மகனே.**
★ **..... அனைத்துக்கும் துடிக்கின்ற இதயத்தின் இதயம்**
■ **அது தான் மகனே ... அன்பு**

தன் கதிர்ப்பார்வை தொடுகின்ற எல்லைகள் அனைத்தையும் என் பாட்டி நேசிக்கிறாள்! அவள் கதிரையில் அமரும் அரசியல் உருவங்களைவிட, அதிகரித்த அறிவுடைய அரசியல் வாதியாகத் தெரிகின்றாள்! சதுரங்கத்தில் நகர்த்தப்படும் காய்கள் போன்றதுதானே கதிரை அரசியலும், அதன் உருவங்களும்! காற்று விரும்பியவாறு விரும்பியப்பக்கம் வீசும் அரேபிய தேசத்தின் அரசியல் அவலங்களையோ, ஓலங்களையோ என் பாட்டி கேட்பதில்லை. அவளின் பார்வையில், இத்தேசங்களின் அரசியல் சதையில்லாத வெறும் எலும்பைப் போன்றதுதான்.

மேற்கத்தியம் வேண்டாம் என்று அடிக்கடி கூறிக் கொண்டேயிருப்பாள் என் பாட்டி ஓடைகளின் தாயான, தன் விருப்பத்திற்குரியவர்களின் ரத்தத்தால் பொட்டுவைத்த தேசத்தை நேசிக்கிறாள். இவ்வளவுக்கும் அவளொன்றும் தேசப்பற்று பற்றியோ, அரசியல் பற்றியோ எந்தப் பள்ளியிலும் பாடம் படித்தவளல்ல. சேவல் கொண்டைகளைப் போல், கிரீடங்கள் அணிந்த அரசர்களது கதைகளைவாசித்ததுமில்லை. கேட்டதுமில்லை.

இருந்தாலும் அவள்... இறைவன் ஒருவனென நம்புகிறாள். தேசமெல்லாம் ஒன்றுதான் என நம்புகிறாள். அவள் அடிக்கடி என்னிடம் சொல்வாள்... "மகனே.. மனிதன் ஒருமுறைதான் மரணிப்பான் என் கண்ணான தேசத்திற்காய் மரணிப்பவர்கள் அவர்களது ரட்சகனிடத்தில் உயிரோடு இருக்கிறார்கள். அவன் அவர்களுக்கு உணவளிக்கிறான்."

■ **மகனே மரங்களைப்பார். அவை நின்றவாறல்லவா மரணிக்கின்றன!**
**என் தோள்களைத் தட்டிச் சொல்கிறாள்... மகனே.. உன் நேசம் தேசத்திற்காய் இருக்கட்டும். பூமியில் நீ தியாகிப் பூவாய் உதிர்ந்தால் நான் மிகவும் மகிழ்வேன்.**

என் சகோதரி "லைலா"ம் எங்களுக்கருகில் நின்று கொண்டு எங்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். அவளது கண்களில்- தேசப்பற்று, தியாகிகளினதும், வீரர்களினதும் உருவங்களாய்த் தெரிகின்றன. கலங்கமின்றி ஒளிரும் என் பாட்டியின் முகத்தைப் பார்த்துக் கூறுகிறேன். தேசத்தின் நேசத்திற்காய் ஒரு புதுப்பாதை வரையப் போகிறேன். இதயமுள்ளவர்களை அன்பினால் அரவணைக்கப் போகிறேன். புன்னகைக்க விரும்புகிறேன். கண்களில் நீர்த்திவலைகள் இது அழுகையின் நேரமல்ல. அன்பின் அறுவடைக் காலம்! பாட்டியின் சந்தோஷம் பூமியின் பூக்களில் தெரிகிறது. பாட்டி என்னைத் தழுவுகிறாள். சூரியத் தழுவல், நெருப்புப் பக்கங்கள் புரட்டப்படுகின்றன.

## ' முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'

## "NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION' (N.M.R.O)

### பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.

2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப் பெறும் உரிமை.

3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.

4. வட மாகாணத்தில் மீளக் குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத்தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும்.

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளி விபரங்களைத் திரட்டுவது.

2. அவர்கள் மத்தியில் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.

3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும் அகதிகள் தொடர்பான அறிவையும் வழங்குதல்.

4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.

5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்.

6. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்தல் என்பதாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

செயலாளர், வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு,

15ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை.

## வடமாகாணத்தின் முஸ்லிம் சனத்தொகைப் பரம்பல்

